## திருப்பலிக்குப் பிறகு சொல்லப்படவேண்டிய நம்பிக்கை ஆண்டிற்கான மன்றாட்டு

விண்ணுலகத் தந்தையே,
இந்த நம்பிக்கை ஆண்டில்,
எங்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்தும்!
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே,
எங்கள் நம்பிக்கையை மிகுதியாக்கும்!
தூய ஆவியாரே,
எங்கள் நம்பிக்கையை உயிருள்ளதாக்கும்!

மூவொரு இறைவா,
இந்த நம்பிக்கை ஆண்டில்,
இல்லறத்தார் முதல், துறவறத்தார் வரை,
பெரியவர் முதல், சிறியவர் வரை,
நாங்கள் எல்லோரும்,
எங்கள் சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும்,
உலகிற்கு உப்பாக, ஒளியாக வாழ்ந்து,
சிறந்த நற்செய்தியாளர்களாகத் திகழ விரும்புகின்றோம்.

தொடக்ககாலக் கிறிஸ்துவர்களைப் போன்று வாழ்ந்து,
கிறிஸ்துவின் அன்பிற்கும், ஆற்றலுக்கும்,
சான்று பகரவும், நீதியும்,அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த, புதிய உலகம் ஒன்றை உருவாக்கவும் ஆசைப்படுகின்றோம்.
எங்கள் எண்ணங்கள் ஈடேற, எங்களை ஆசிர்வதியும்.

இந்த நம்பிக்கையாண்டில்,
இயேசுவை அதிகமாய் அறியவும்,
அனுபவிக்கவும், அறிவிக்கவும்,
அன்னை மரியாவின் பரிந்துபேசுதல்,
எங்களுக்குத் துணைநிற்பதாக.

எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வழியாக, உம்மை மன்றாடுகின்றோம்.
ஆமென்.

**Bishop's House, Post Box No. 3, Kumbakonam - 612 001.**
**E-mail : kumbakonamdiocese@gmail.com**
**Webpage : www.dioceseofkumbakonam.org.**

*Udaya Offset - Kmu. Cell : 94436 51112*

**DIOCESE OF KUMBAKONAM**

# NEWS - LETTER

**(Compiled and Edited by Diocesan News - Letter Committee)**

VOL : XXXVIII October - 2012 No. 10



**மனதிலே பேரின்ப, பெரும் மகிழ்ச்சி பிறக்க**
**மலைபோ லுள்ள தீசக்திகள் அழிய**
**அன்னைக் கோரொரு செபமா லையை**
**அனைவரும் தொடுத்தே மகிழ்வோம் இனிதே!**

## Bishop's Programme – October, 2012

| | | | |
|---|---|---|---|
| 10th September - 17th October | | | USA |
| 19 | FRI | 09.00 AM | Blessing of the Chapel dedicated to St Antony of Padua at Illupur |
| | | 03.30 PM | KMSSS General Body Meeting |
| 20 | SAT | 11.30 AM | Golden Jubilee of Sr. Mary Emma, Holy Angels Convent, Kmu |
| 21-26 | | | Preaching retreat for the Fathers of the diocese of Salem |
| 28 | SUN | 08.00 AM | Mass at Sukkambar followed by Mass at Thogur at 11.00 a.m. and blessing of the New Convent (Congregation of Catechist Sisters of the Sacred Heart) |
| 29 | MON | | Visitors' Day (Diocesan and Religious Priests) |
| 30 | TUE | | Visitors' Day (Religious Sisters and Lay People) |
| | | 09.00 AM | Anbiam Regional Secretaries Meeting, Bishop's House, Kmu |
| 31 | WED | 11.00 AM | Blessing of the Home for the aged at Sagayamatha Hospital, Pullambadi |

## PAPAL INTENTION FOR OCTOBER - 2012



**General Intention:** That the New Evangelization may progress in the oldest Christian countries.

**Missionary Intention:** That the celebration of World Mission Day may result in a renewed commitment to evangelization.



9. I shall deliver from purgatory those who have been devoted to the Rosary.

10. The faithful children of the Rosary shall merit a high degree of glory in heaven.

11. You shall obtain all you ask of me by the recitation of the Rosary.

12. All those who propagate the holy Rosary shall be aided by me in their necessities.

13. I have obtained from my Divine Son that all the advocates of the Rosary shall have for intercessors the entire celestial court during their life and at the hour of death.

14. All who recite the Rosary are my sons and brothers of my only Son, Jesus Christ.

15. Devotion of my Rosary is a great sign of predestination.

## ***MOTHER MARY***



"But among creatures no one knows Christ better than Mary; no one can introduce us to a profound knowledge of his mystery better than his Mother"

Pope John Paul II

# 15 Promises from our Blessed Mother to Saint Dominic and Blessed Alan to all those who would pray the Holy Rosary...

1. Whoever shall faithfully serve me by the recitation of the Rosary, shall receive signal graces.

2. I promise my special protection and the greatest graces to all those who shall recite the Rosary.

3. The Rosary shall be powerful armor against hell. It will destroy vice, decrease sin and defeat heresies.

4. It will cause virtue and good works to flourish. It will obtain for souls the abundant mercy of God. It will withdraw the hearts of men from the love of the world and its vanities, and will lift them to the desire of eternal things. Oh, that souls would sanctify themselves by this means.

5. The soul which recommends itself to me by the recitation of the Rosary, shall not perish.

6. Whoever shall recite the Rosary devoutly, applying himself to the consideration of its sacred mysteries, shall never be conquered by misfortune. God will not chastise him in His justice. He shall not perish by an unprovided death. If he be just, he shall remain in the grace of God and become worthy of eternal life.

7. Whoever shall have a true devotion for the Rosary shall not die without the sacraments of the Church.

8. Those who are faithful to recite the Rosary shall have, during their life and at their death, the light of God and the plentitude of His graces. At the moment of death, they shall participate in the merits of the saints in paradise.



## WISH YOU A HAPPY BIRTHDAY

| | | |
|---|---|---|
| 01.10.1967 | Fr. A. Leo Dominic Nallus Raja | Bishop's House, Kmu |
| 02.10.1950 | Fr. A. Santiagu | Purathakudi |
| 03.10.1978 | Fr. B. Robert | KMSSS, Kmu |
| 04.10.1976 | Fr. K. Arokiasamy | USA |
| 06.10.1949 | Fr. S. Selvarayar | Naduvalur |
| 07.10.1966 | Fr. L. Vincent Rochmanickam | Koovathur |
| 10.10.1977 | Fr. K. Robert | Kulumur |
| 11.10.1963 | Fr. I. Adaikalasamy | Perambalur |
| 14.10.1959 | Fr. M. Philomindas | Irungalur |
| 15.10.1950 | Fr. A. Soosaimanickam | Andimadam |
| 17.10.1948 | Fr. H. Vallabanathan | Kalathilventranpet |
| 18.10.1960 | Fr. A. Xavier | Palayam |
| 18.10.1979 | Fr. C. Denis Amirtharaj | Bishop's House, Kmu |
| 20.10.1970 | Fr. P. J. Samson | Chalice, Kmu |
| 23.10.1954 | Fr. S. Lourdusamy | Elakurichy |
| 23.10.1977 | Fr. P. Singarayar | Perambalur |
| 26.10.1936 | Fr. I. Antony Joseph | Bethany Home, Kmu |
| 26.10.1960 | Fr. T. Devadoss | Thottiam |
| 27.10.1972 | Fr. C. Joseph Christuraj | Konalai |
| 29.10.1957 | Fr. M. Antonisamy | Keelamichaelpatti |

## WISH YOU A HAPPY ORDINATION DAY

| | | |
|---|---|---|
| 03.10.1962 | Fr. I. Arulsamy | Priests' Quarters, Pullambadi |
| 12.10.1977 | Fr. S. Daveedhu | Perumalpalayam |

## NECROLOGY

| | | |
|---|---|---|
| 06.10.1984 | Rev. D. Peter Amalraj | Periyavarceeli |
| 10.10.1957 | Rev. S. Ambrose | Kumbakonam |
| 12.10.2003 | Most Rev. D. Paul Arulsamy | Kumbakonam |
| 16.10.1990 | Rev. R. Arputham | Kumbakonam |
| 17.10.1995 | Rev. D. Gnanapragasam | Aachanur |
| 19.10.1992 | Rev. A. Ignatius | Chennai |
| 20.10.2010 | Rev. R. K. Pappusamy | Kumbakonam |
| 23.10.1944 | Rev. P. S. Ignacinathar | Aachanur |
| 31.10.1967 | Rev. Maria Francis | Kumbakonam |

### On the Most Holy Rosary...

"Say the Rosary every day to obtain world peace and an end to war."

- Our Lady of Fatima, May 13, 1917.

"Give me an army saying the Rosary and I will conquer the world."

- Blessed Pope Pius IX.



| | | | |
|---|---|---|---|
| 22 | R.S.AmirthaSamy Settiyar | Papanasam | 200-00 |
| 23 | Parish People | Papanasam | 200-00 |
| 24 | St Thomas Elementery School | Papanasam | 500-00 |
| 25 | P. Peter | Punalvasal | 30-00 |
| 26 | Mariyain Sennai | Punalvasal | 100-00 |
| 27 | A.Parisuthanathan | Punalvasal | 100-00 |
| 28 | A.YesuMani | Punalvasal | 100-00 |
| 29 | Mariya Susainathan Rosary | Punalvasal | 500-00 |
| 30 | Sagayamary | Punalvasal | 30-00 |
| 31 | People | Punalvasal | 200-00 |
| 32 | Human Rights | Vadugarpet | 1000-00 |
| 33 | People of Alambadi Mettur | Viragalur | 1000-00 |
| | | **TOTAL** | **19,261-00** |

### BALANCE SHEET

| S. No. Particulars | Receipts |
|---|---|
| **Balance on 31.08.2012** | **6,01,631 - 00** |
| **Month of September - 2012** | **19,261 - 00** |
| | |
| **Total** | **6,20,892 - 00** |

E.&.O.E.

Very Rev. Fr. A. Sahayaraj
Procurator

## BISHOP'S FUND FOR EDUCATION MONTH OF SEPTEMBER - 2012

| S. No. | Particulars | Parishes | Amount |
|---|---|---|---|
| 01 | Parish Priest | Mathur | 1000-00 |
| 02 | Headmaster, Correspondent St Peter's Higher Secondary School | Viragalur | 2000-00 |
| 03 | Parish Priest | Sikkalnayaganpet | 1000-00 |
| 04 | Parish Priest | Varadarajenpet | 2000-00 |
| 05 | Parish Priest & St Sebastian's School | Papanasam | 5000-00 |
| 06 | M.S.Jaganathan | Papanasam | 100-00 |
| 07 | S.MaryJosepin | Papanasam | 100-00 |
| 08 | K.A.Vincent | papanasam | 100-00 |
| 09 | A. Adaikalam Tr. | Papanasam | 100-00 |
| 10 | St Sesili Tailors | Papanasam | 650-00 |
| 11 | J. Arokiamary | Papanasam | 200-00 |
| 12 | S. Santanasamy | Papanasam | 200-00 |
| 13 | S. Amirtha Raj | Papanasam | 100-00 |
| 14 | Johnson Furniture | Papanasam | 200-00 |
| 15 | J.Joseph, Rtd. HM | Papanasam | 500-00 |
| 16 | J.Lourd Raj | Papanasam | 100-00 |
| 17 | Headmaster & Correspondent, St Sebastine Metric School | Papanasam | 1000-00 |
| 18 | Servite Sisters | Papanasam | 501-00 |
| 19 | A. Emmanuvel | Papanasam | 150-00 |
| 20 | A.Joseph Raj | Papanasam | 200-00 |
| 21 | St Joseph CottenShop | Papanasam | 100-00 |



## OUR BELOVED BISHOP SPEAKS

## THE FUTURE AS PRESENT

Respected and dear brother-priests, religious and laity,

Two little girls were counting their pennies. One said, "I have five pennies." The other said, "I have ten." "No," said the first little girl, "you have just five cents, the same as I have." "But," the second child quickly replied, "my father said that when he comes home tonight, he would give me five cents, and so I have ten cents." **The child's faith gave her proof of that which she did not yet see, and she counted it because it had been promised by her father.**

Here are some famous promises of our heavenly Father given to us through Jesus:

1. "Come to me, all you that are weary and are carrying heavy burdens, and I will give you rest" (Mt 11:28).
2. "Ask, and it will be given you; search, and you will find; knock and the door will be opened for you" (Lk 11:9).
3. "You will have pain, but your pain will turn into joy" (Jn 16: 20b).
4. "I am with you always, to the end of the age" (Mt 28: 20).

**If we believe that God is our Father and he is all powerful, his promises will make us richer than what we are now.**

Faith always enables the believing persons to treat **the future as present and the invisible as seen.**

Wishing you a successful **Year of Faith**,

Yours affectionately in our Lord,

+ F. Antonisamy,
Bishop of Kumbakonam.

# உங்கள் அன்பான கவனத்திற்கு

## அக்டோபர் மாதம் 21 ஆம் நாள்

இறை இயேசுவில் அன்புக்குரிய அருள்பணியாளர்களே, இருபால் துறவியர்களே, இறைமக்களே,

நீங்கள் அனைவரும் அறிந்ததுபோல் நம்முடைய திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள நம்பிக்கை ஆண்டு, இவ்வருடம் அக்டோபர் 11 ஆம் நாள் தொடங்கி 2013 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் நாள் நிறைவடைகிறது.

**நமது கும்பகோணம் மறைமாவட்டத்தில்** எல்லாப் பங்குகளிலும், நிறுவனங்களிலும் நம்பிக்கை ஆண்டு தொடக்க விழாவை **அக்டோபர் மாதம் 21 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை** சிறப்பாகக் கொண்டாட அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

இப்படிக்கு,<br>
என்றும் அன்புடன்,<br>
மேதகு ஆயர் F. அந்தோனிசாமி,<br>
குடந்தை ஆயர்.

## IMPORTANT EVENTS - SEPTEMBER 2012

1. The Bishiop blessed the New Building for Home for Childern at Perumalpalayam on September 05, 2012 and the same day the Bishop blessed the New School building of Nirmala Higher Secondary School at Ariyalur.

2. The Bishop blessed the chapel dedicated to St Antony of Padua at Manaveli, Valangaiman on September 09, 2012.



அனைத்தும் அன்பியம் அன்பியமாக மொத்தம் 15 அன்பியங்கள் சந்தித்து செப வாழ்வில் வளர, உயர ஆலோசணை தரப்பட்டது. மேலும் மாலை வேளையில் செப வழிபாடு நிகழ்த்தப்பட்டது இறுதியாக ஆலயத்தில் நன்றித் திருப்பலியோடு நிறைவுற்றது.

26.8.2012 மறைப்பணி நிலையத்தில் சிறப்பு அருங்கொடை செப வழிபாடும் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது .

31.8.2012 சேலம் பேராலயத்தில் அருங்கொடை செப வழிபாடும் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது .

2.9.2012 பாபநாசம் பங்கு இராஜகிரியில் அருங்கொடை செப வழிபாடும் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது .

4.9.2012 கூவத்தூர் பங்கில் அருங்கொடை செப வழிபாடும் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது .

7.9.2012 பாண்டிச்சேரி உயர் மறைமாவட்டத்தின் பேராலயத்தில் அருங்கொடை செப வழிபாடும் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது .

8.9.2012 பூண்டி மாதா திருத்தலத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்ட்து .

9.9.2012 ஜெயங்கொண்டம் மறைவட்ட அருங்கொடை செப மையமான ஜெயங்கொண்டம் புனித பாத்திமா அன்னை திருத்தலத்தில் அருங்கொடை செப வழிபாடும் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது .

14.9.2012 ஆண்டிமடம் பங்கு அருளாணந்தர்புரத்தில் மாலை 6.30 மணி முதல் 8 மணி வரை அருங்கொடை செப வழிபாடு நிறைவேற்றப்பட்டது .

16.9.2012 கோக்குடி பங்கிலுள்ள ஆரோக்கியமாதா கெபியில் சிறப்பு அருங்கொடை செப வழிபாடும் நன்றித் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது.

பூண்டி மாதா பசிலிக்காவில் காலை 11.15 மணிக்கு அன்னையின் நவநாள் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

– அருள்தந்தை **P.** ஹென்றி புஷ்பராஜ்<br>
பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்.

## IV. குடும்ப நலப் பணிக்குழு :

1. 1. ஆகஸ்ட் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் இருங்களூர் பங்கில் நடைபெற்ற திருமணப் பயிற்சிக் கருத்தரங்கில் 85 பேர் கலந்து சான்றிதழ் பெற்றனர்.

2. செப்டம்பர் 15 மற்றும் 16 தேதிகளில் குடந்தை மறைப்பணி நிலையத்தில் 25 இளைஞர் இளம்பெண்கள் திருமணத் தயாரிப்புப் பயிற்சி பெற்றனர்.

3. செப்டம்பர் 22 &23 சனி மற்றும் ஞாயிறு இரண்டு நாள்கள் திருமணத் தயாரிப்புப் பயிற்சி வந்தலை பங்கில் நடைபெற்றது. இதில் 85 பேர் கலந்து பயன் பெற்றனர்.

4. குடந்தை “குடும்ப நலப் பணிக்குழு” வுக்கென்று விரைவில் ஒரு இணையதளம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

| அக்டோபர் மாதம் திருமணத் தயாரிப்புப் பயிற்சி கருத்தரங்கம் நடைபெறும் இடங்கள்: | | |
|---|---|---|
| 1. அக்டோபர் 13&14 | சனி மற்றும் ஞாயிறு | புனித ஆரோக்கிய அன்னை ஆலயம், வடுகர்பேட்டை. |
| 2. அக்டோபர் 20&21 | சனி மற்றும் ஞாயிறு | குடந்தை மறைப்பணி நிலையம். |
| 3. அக்டோபர் 27&28 | சனி மற்றும் ஞாயிறு | தூய இருதய அன்னை ஆலயம், திருவையாறு. |

## V. அருங்கொடை செப பணிக்குழுவின் மாத அறிக்கை

17.08.2012 ஆண்டிமடம் பங்கு தஞ்சாவூரான் சாவடியில் செபக்கூட்டம் மாலை 6.30 மணி முதல் 8 மணி வரை நிகழ்த்தப்பட்டது.

தொட்டியம் பங்கில் சிறப்பு அருங்கொடை செபம் மற்றும் திருப்பலி நிகழ்த்தப்பட்டது.

18.8.2012 பெங்களூர், புனித குழந்தை இயேசு திருத்தலத்தில் முழு இரவு செப வழிபாடு நிகழ்த்தப்பட்டது.

22.8.2012 முதல் 25.8.2012 வரை மிக்கேல்பட்டி பங்கிலுள்ள வீடுகள்



**நம்பிக்கை ஆண்டு: 11.10.2012-24.11.2013**

# விருது வாக்கு : இயேசுவை அறிவோம் – அறிவிப்போம்

**நம்பிக்கை ஆண்டை சிறப்பாகக் கொண்டாட தமிழக நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழுவின் பரிந்துரைகள்:**

**பரிந்துரைகளின் வரிசை எண்கள் செயல்பாடுகளின் முக்கியத்துவ அடிப்படையில் அமைந்துள்ளன**

**1. மறைமாவட்ட அளவில்**

1.1 நம்பிக்கை ஆண்டு தொடக்க விழா

1.2 மறைமாவட்ட செயல்திட்டங்களை உருவாக்கும் குழுவை (Diocesan Faith Animation Team) அமைத்தல்

1.3 நம்பிக்கை வாழ்வு பற்றிய மறைமாவட்ட ஆய்வை (Survey) மேற்கொள்ளுதல்

1.4 நம்பிக்கை ஆண்டை மையப்படுத்தி அருள்தந்தையர்களுக்குரிய மாதாந்திர தியானக் கூட்டங்களை நடத்துதல்

1.5 கத்தோலிக்கர்கள் நடுவில் கிறிஸ்தவ நம்பிக்கை வளரவும், உறுதிபடுத்தப்படவும், புதிதாக தொடங்கவிருக்கும் மாதா தொலைக்காட்சி சிறப்பாகச் செயல்பட சாந்தோம் கலைத்தொடர்பு நிலையத்திற்கு அருளுதவியும், பொருளுதவியும் செய்ய முன்வருதல்

1.6 இளைஞர்களுக்கு நம்பிக்கை நடைபயணம் : மறைமாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து வீடு சந்திப்பு, அருங்கொடை செபவழிபாடு, திருப்பலி, கலைநிகழ்ச்சிகள் வழியாக அங்கேயுள்ள மக்களின் நம்பிக்கையைத் தூண்டுதல், வளர்த்தல்

1.7 இருபால் துறவியரும் மறைமாவட்டத் துறவியர் பேரவையின் துணையோடு திட்டமிட்டு அன்பியங்கள், பொது நிலையினர் இயக்கங்கள், வீடு சந்திப்பு ஆகியவற்றின் வழியாக கிராமங்களில் நற்செய்தி பணிபுரிதல்

1.8 அருள்தந்தையருக்கும், துறவியர்களுக்கும், பொதுநிலையினருக்கும் நம்பிக்கை ஆண்டு புரிதல் கூட்டங்கள் நடத்துதல்

1.9 இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி ஏடுகள் (CCC) பற்றிய பயிற்சிப் பாசறைகளுக்கு ஏற்பாடு செய்தல்

1.10 பல்சமய உரையாடலுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்

**2. பங்கு அளவில்**

2.1 பங்குத்தந்தையரும், துறவியர்களும் இல்லங்களைச் சந்தித்து நம்பிக்கை வாழ்வைப் புதுப்பித்தல்

2.2 ஒவ்வொரு பங்கிலும் இருபால் துறவறச் சபையினரும் ஒரு கிராமத்தைத் தத்தெடுத்தல்

2.3 கிறிஸ்தவ நம்பிக்கையில் வளரவும், அதைப் பிறரருக்கு அறிவிக்கவும், இறைமக்களுக்கு அன்பியங்களின் வழி பயிற்சி அளித்தல்

2.4 பொதுநிலையினரின் இயக்கங்களைப் பக்தசபைகளைப் புதுப்பித்தல் - உறுதிப்படுத்துதல்

2.5 இளைஞர்களுக்கு நம்பிக்கை நடைபயணம்: பங்கிலுள்ள ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து வீடு சந்திப்பு, அருங்கொடை செபவழிபாடு, திருப்பலி, கலைநிகழ்ச்சிகள் வழியாக அங்கேயுள்ள மக்களின் நம்பிக்கையைத் தூண்டுதல், வளர்த்தல்

2.6 ஒவ்வொரு மாதமும் சிறுவர்களுக்கும், இளையோருக்கும் சிறப்புத் திருப்பலி நடத்துதல்

2.7 ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் கத்தோலிக்க விசுவாசம் தோன்றி வளர்ந்த இடங்கள் உண்டு. அந்த இடங்களுக்கு திருப்பயணம் மேற்கொண்டு நம்பிக்கையின் வேர்களை உறுதிப்படுத்துதல்

2.8 இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி ஏடுகள் (CCC) பற்றிய வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்தல்

**அன்பார்ந்த அருள்பணியாளர்களே, இருபால் துறவியர்களே, இறைமக்களே, நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் சிறப்பாகச் செயல்படுத்த உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.**

என்றும் அன்புடன்,
மேதகு ஆயர் F. அந்தோனிசாமி,
குடந்தை ஆயர்.



13-9-2012 - அன்று பெண்கள் பணிக்குழுவில் நடைபெற்ற கருத்தரங்கில் "சமூகப் பகுப்பாய்வு" என்னும் தலைப்பில் ஒருங்கிணைப்பாளர் க. ராஜா கருத்தமர்வை வழிநடத்தினார்.

## III. பெண்கள்பணிக்குழு :

21-24.08.12 செம்போடை, மாத்தூர், வில்லியவரம்பல், செபமாலைபுரம், குடந்தை, பாத்திமாபுரம் ஆகிய பங்குகளிலுள்ள பெண்களைச் சந்தித்து - திருச்சி-பிராட்டியூரில் நடைபெறும் கருத்தாளர் பயிற்சிக்கு அனுப்ப தயார்படுத்தினோம்.

25-26.08.12 திருச்சி-பிராட்டியூரில் கருத்தாளர்ப் பயிற்சி நடைபெற்றது. நமது மறை மாவட்டத்திலிருந்து கும்பகோணம், மாத்தூர் ஆகிய இரண்டு பங்குகளிலிருந்து 3 நபர்கள் கலந்து கொண்டு பயிற்சிபெற்று வந்தார்கள்.

06-12.09.12 குடந்தை,வில்லியவரம்பல், செம்போடை, சி.நா.பேட்டை, குவெனல்லாநகர், ஆகிய பங்குகளிலுள்ள பெண்களைச் சந்தித்து நடைபெற இருக்கிற கூட்டத்திற்கு தயார்ப்படுத்தும் பணிகள் செய்தோம்.

13.09.12 மறைப்பணி மையத்தில் மாநிலக் கருத்தரங்கு இறை வழிபாட்டுடன் தொடங்கப்பட்டது. பெண்கள் பணிக்குழுச் செயலர் அருள்சகோதரி பவுலின் மேரி அவர்கள் அனைவரையும் வரவேற்றார். அனைவரும் அறிமுகம் செய்து கொண்டபின் கீழ்க்கண்ட தலைப்பில், ஆன்மீக விழிப்புணர்வு - அருள்சகோதரி. மரிசலின் ''சமூகமும், பெண்களும்'' - அருள்தந்தை . ஜீலியன் ''சமூகப் பகுப்பாய்வு'' - Mr . ராஜா ''அரசியல் பயிற்சி'' - இயக்குனர் தந்தை P. ஹென்றி புஷ்பராஜ் அவர்களால் கருத்துக்கள் வழங்கப்பட்டன. திருமதி. மரியபுஷ்பம் நன்றி கூறினார் 30 பெண்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். கூட்டம் இனிதே நிறைவுற்றது.

இப்பணிகள் சிறப்பாக நடைபெற அருள்திரு P. ஹென்றி புஷ்பராஜ் இயக்குநர் அவர்களும், அருள்தந்தையர்கள் ஜோசப் ஆரோக்கியராஜ், ஆரோக்கி தாஸ், ஜோசப் மைக்கேல், அருள்சகோதரி அருள் ஜெயசீலி SSA மற்றும் வேதியர்கள் சகாயராஜ், திவ்யநாதன், அடைக்கலராஜ், பெனிபீட்டர் போன்றவர்களும் உதவினார்கள் அவர்களுக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.

## II. இளைஞர் பணிக்குழு :

**YCS/YSM இயக்கச் சந்திப்பு**

23-8-2012 - R.C நடுநிலைப்பள்ளி, வடகரை

23-8-2012 - கார்மெல் ஆங்கிலப்பள்ளி, வலங்கைமான்

06-9- 2012 - புனித மிக்கேல் உயர்நிலைப்பள்ளி – கீழ மிக்கேல்பட்டி

07 -9- 2012 – பாரத மாதா உயர்நிலைப்பள்ளி – நடுவலூர்

11 - 9 – 2012 – புனித வளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி – கும்பகோணம்

12 - 9 – 2012 – புனித அகுஸ்தினார் நடுநிலைப்பள்ளி – கும்பகோணம்.

**இளைஞர் இயக்கம் சந்திப்பு** : -

06-09-2012 - நடுவலூர் பங்கு புனித தொன்போஸ்கோ இளைஞர் இயக்க உறுப்பினர்கள் சந்திக்கப்பட்டனர்.

07-09-2012 - அன்று நடுவலூர் புனித தொன்போஸ்கோ இளைஞர் இயக்க உறுப்பினர்களால் ஆரோக்கிய அன்னையின் பிறப்பு விழா, சிறப்புத் திருப்பலி மற்றும் தேர்ப்பவணி நடைபெற்றன. இதில் பங்குத் தந்தையர்கள் மற்றும் இளைஞர் பணிக்குழு இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இயக்க உறுப்பினர்களை இயக்குநர் மற்றும் நிர்வாகக் குழு சந்தித்தனர். நிகழ்ச்சியினை ஒருகிணைப்பாளர் ஏற்பாடு செய்தார்.

09-09-2012 - அய்யம்பேட்டை பங்கு அகரமாங்குடி கிளை கிராமத்தில் இயக்க உறுப்பினர்களை நிர்வாகக் குழு மற்றும் ஒருகிணைப்பாளர் ஆகியோர் சந்தித்தனர். இயக்க வளர்ச்சியின் செயல்பாடுகள் குறித்த திட்டமிடல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்து இளைஞர்களும் இளம் பெண்களும் கலந்து கொண்டனர்.



# தமிழக ஆயர் பேரவையின் நம்பிக்கை ஆண்டைப் பற்றிய சுற்றறிக்கை

**அன்பார்ந்த அருள்பணியாளர்களே, இருபால் துறவியர்களே, இறைமக்களே, தமிழக ஆயர் பேரவையின் நம்பிக்கை ஆண்டைப் பற்றிய சுற்றறிக்கையை 2012 அக்டோபர் 7 ஞாயிறு அல்லது அக்டோபர் 14 ஞாயிறு அன்று திருப்பலியின் போது எல்லா கோயில்களிலும் வாசிக்கப்பட வேண்டும்.**

மேதகு F. அந்தோனிசாமி,
குடந்தை ஆயர்.

இறை இயேசுவில் அன்புக்குரிய அருள்பணியாளர்களே, இருபால் துறவியர்களே, இறைமக்களே, திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்கள் அறிவித்துள்ள, இந்த நம்பிக்கை ஆண்டில் ஆர்வத்தோடு பங்கேற்க, உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**1. நம்பிக்கை ஆண்டு**

திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள நம்பிக்கை ஆண்டு 2012 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 ஆம் நாள் தொடங்கி, 2013 ஆம் ஆண்டு, நவம்பர் 24 ஆம் நாள், கிறிஸ்து அரசர் திருநாளன்று நிறைவடைகிறது. 2 ஆம் வத்திக்கான் சங்கம் தொடங்கிய 50 ஆம் ஆண்டின் நிறைவையும், கத்தோலிக்க மறைக்கல்வி ஏடு வெளியிடப்பட்ட 20 ஆம் ஆண்டின் நிறைவையும் நினைவுகூர்ந்து இந்த நம்பிக்கை ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நம்பிக்கை ஆண்டின் மையப் பொருளாக “புதிய நற்செய்தி அறிவிப்புப் பணி வழியாக கிறிஸ்துவ நம்பிக்கையை வழங்குதல்” என்பதை திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அறிவித்துள்ளார்.

**2. நம்பிக்கை என்றால் என்ன?**

திருவிவிலிய பொது மொழிபெயர்ப்புக்குப் பிறகு, “விசுவாசம்” என்னும் வடமொழிச் சொல் கைவிடப்பட்டு, அதற்குப் பதிலாக அதனைக் குறித்துக்காட்ட, “நம்பிக்கை” என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. இதுவரை “நம்பிக்கை” என்ற சொல்லால் நாம் அழைத்ததை இனி “எதிர்நோக்கு” எனக் குறிப்பிடுகிறோம் என்பதை மனதில் கொள்வோம்.

கடவுளின் சுயவெளிப்படுத்துதலுக்கும் அவரது மாபெரும் வல்ல செயல்களுக்கும் மனிதன் கூறும் பதில் மொழியே இறை நம்பிக்கை. இதுவே ஆன்மிக வாழ்வுக்கு ஊற்றும், அடித்தளமுமாய் உள்ளது. அன்று முதுபெரும் தந்தை ஆபிரகாமின் நம்பிக்கை, வரலாற்றில் இஸ்ரயேல் மக்களின் நம்பிக்கை வாழ்வுக்கு அடித்தளமாய் அமைந்தது. “வாக்களித்தவர் நம்பிக்கைக்குரியவர்” என ஆபிரகாம் கருதினார் ( எபி 11:11). அவ்வாறே இன்று கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமாக விளங்க வேண்டியது, நாம் இயேசு கிறிஸ்துவின் மீது வைக்கவேண்டிய நம்பிக்கையாகும்.

யோவான் நற்செய்தியில் (யோவா 4:43-54) அரச அலுவலர் மகன் குணமாதல் நிகழ்ச்சி, நம்பிக்கை என்றால் என்ன என்பதை நமக்குத் தெளிவாக விளக்கிக்

கூறுகின்றது. இஸ்ரயேல் நாட்டிலுள்ள கப்பர்நாகும் ஊரைச் சேர்ந்த அரச அலுவலர் இயேசுவின் மீது முழு நம்பிக்கை வைத்த போது, அவர் மகன் நலம் பெற்றான். இந்நிகழ்ச்சியில் முதலாவதாக, அரச அலுவலர் இயேசுவை ஆற்றலும் அன்பும் நிறைந்த ஆண்டவராக அறிந்திருந்தார்; இரண்டாவதாக இயேசுவைத் தேடிச் சென்றார்; மூன்றாவதாக இயேசுவிடம் அவர் வேண்டுதலைச் சமர்ப்பித்தார்; நான்காவதாக இயேசு சொல்வதைக் கேட்டார்; ஐந்தாவதாக இயேசு சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்தார்; ஆறாவதாக அவர் தனது நம்பிக்கையை வாழ்வாக்கினார்; வீடு நோக்கி நடந்தார். அவர் மகன் பிழைத்துக் கொண்டான். அவர் வீட்டார் அனைவரும், இயேசுவை நம்பினர். இதுவே நம்பிக்கையின் செயல்முறை.

### 3. நம்பிக்கையின் முப்பெரும் நிலைகள்

நம்பிக்கை இன்றி மனித வாழ்வு இல்லை. சமய வாழ்விற்கு அடித்தளமாக விளங்குவது நம்பிக்கையாகும். இயேசுவின் மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கையே, கிறிஸ்துவத்தின் உயிராக உள்ளது. இந்த நம்பிக்கை முப்பெரும் நிலைகளை உடையது.

### 3.1 முதல்நிலை : கோட்பாடுகளை ஏற்றுக்கொள்வது

இறைவெளிப்பாடு என்பது மனித அறிவுத்திறனுக்கு அப்பாற்பட்ட இறை உண்மைகளை, இறைவார்த்தை மற்றும் திருச்சபையின் கோட்பாடுகள் வழியாக, இறைவனே நமக்குத் தெரியப்படுத்துவதாகும். அவை நமது அறிவுக்குப் புலப்படாதவை எனினும், கடவுளே அவற்றை நமக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்பதால், அவற்றை நாம் உண்மையென ஏற்றுக்கொள்வதே கிறிஸ்துவ நம்பிக்கை. திருவிவிலியமும், இரண்டாம் வத்திக்கான் சங்கமும், கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி ஏடும், இறைவெளிப்பாட்டு உண்மைகளை நமக்கு வழங்குகின்றன.

### 3.2 இரண்டாம் நிலை : அன்புறவில் தம்மை அர்ப்பணிப்பது

வாழ்வளிக்கும் அன்பாகத் தம்மையே வெளிப்படுத்தும் இறைவனை ஏற்று, அவருக்கு பதிலன்பு செலுத்தி, அவரது திருவுளத்திற்குக் கீழ்ப்படிவதன் வழியாக, நம்மையே அவருக்குக் கையளிப்பதே நம்பிக்கை. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் 11 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நம் மூதாதையரான நோவா, ஆபிரகாம், மோசே போன்றோர் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். இத்தகைய தன்னர்ப்பண அன்புறவே நம்பிக்கை என்னும் படிப்பினையை, 2 ஆம் வத்திக்கான் சங்கமும் சுட்டிக்காட்டுகின்றது: வெளிப்படுத்தும் கடவுளுக்கு மனிதர் நம்பிக்கையோடு கீழ்ப்படிந்திருக்க (உரோ 1:5) வேண்டும். இதன் வழியாக, அவர்கள் தாமே விரும்பி கடவுளுக்குத் தங்களைக் கையளிக்கின்றார்கள் (இறைவெளிப்பாடு பற்றிய மறைக்கொள்கைத் திரட்டு, 5).

### 3.3 மூன்றாம் நிலை : இயேசுவின் நற்செய்தியை ஏற்றுச் செயல்படுவது

இயேசுவே இறைத்தந்தையின் முழுமையான வெளிப்பாடு என்பதால், கிறிஸ்தவர்களுக்கு இறைவனை நம்புவது என்பது, இயேசுவை நம்புவதே. இயேசு என்ற ஆளையும், அவர் போதித்த இறை ஆட்சியின் விழுமியங்களையும் நாம் நம்புகிறோம். அவரை அன்பு செய்வது என்பது, அவருக்கும் அவர் அன்பு செய்யும் மனிதருக்கும்



## மறைமாவட்ட மேய்ப்புப் பணி மையச் செய்திகள்

### I. மறைக்கல்விப் பணிக்குழு மற்றும் மறைப்பணி மையம் பணியறிக்கை ஆசிரியர்கள் தியானம்

செப்டம்பர் மாதம் 1,2 தேதிகளில் கும்பகோணம் மறைவட்டத்தில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் ஆண்டு தியானம் மறைப்பணி மையத்தில் நடைபெற்றது, இதில் 218 ஆசிரியர்கள் பங்கேற்றார்கள். குருமட அதிபர் தந்தை சூசைமாணிக்கம் அவர்கள் தியானத்தை தொடங்கி வைத்தார். பின்னர் மறைமாவட்ட மறைப்பணி மையத்தின் இயக்குநர் தந்தை அவர்கள் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைப் பற்றியும் நம்பிக்கை ஆண்டைப் பற்றியும் சிறப்பான கருத்துரைகளைத் தொகுத்து வழங்கினார். அருள்தந்தை ஜான்கென்னடி, V.I அடைக்கலசாமி இருவரும் தியானத்தை வழிநடத்தினார்கள்.

01.09.2012 மதியம் 2 மணியளவில் மேதகு ஆயர் அவர்கள் விவிலியக் கண்காட்சியை பார்வையிட்டு அதன்பிறகு ஆசிரியர்களுக்கு சிறப்பான கருத்துரை வழங்கினார்.

02.02.2012 காலை மறைவட்ட முதன்மைகுரு அவர்கள் தியானத்தை தொடங்கி வைத்து கருத்துரை வழங்கினார். மதியம் 11.30 மணியளவில் ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து 12 மணியளவில் மறைமாவட்ட கல்விப் பணிக்குழு செயலர் தந்தை E. அடைக்கலசாமி அவர்கள் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு மதியம் 1 மணியோடு தியானம் நிறைவு பெற்றது.

### நன்னெறி மறைக்கல்வி – பள்ளி ஆய்வு

செப்டம்பர் 5 முதல் 7 முடிய மிக்கேல்பட்டி மறைவட்டத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும்; 9,10,14 தேதிகளில் குடந்தை, வடகரை, அம்மன்பேட்டை, செம்போடை, மாத்தூர் ஆகிய பங்குகளில் உள்ள பள்ளிகளிலும் மறைக்கல்வி நன்னெறி பாடங்களில் ஆய்வு செய்யப்பட்டு, கடந்த ஆண்டு சிறப்புத்தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டு ஆசிரியப் பெருமக்களையும் மாணவ, மாணவிகளையும் உற்சாகப்படுத்தினோம். பள்ளி ஆய்விற்கும் தியானம் நடைபெறுவதற்கும் சிறப்பாக உதவி செய்த அருள்தந்தையர்கள், அருள்சகோதரிகள், வேதியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களும், நன்றிகளும் உரித்தாகுக.

# FROM THE DESK OF FR. PROCURATOR

Dear Rev. Fathers,

Prayerful greetings of Peace and Joy for the Feast of Our Lady of Rosary, from Fr. A. Sahayaraj.

01. As you all know the **MISSION SUNDAY** is celebrated on 21st October 2012. Many of our Priests have already started to plan out to celebrate it in a grand manner. May I request you Rev. Fathers to contribute more to the **PONTIFICAL SOCIETY FOR THE PROPAGATION OF FAITH** and also to the **PONTIFICAL SOCIETY OF THE HOLY CHILDHOOD** this year.

02. Last year we were in the 8th place in the **MISSION SUNDAY COLLECTIONS, 7th place in the HOLY CHILDHOOD COLLECTIONS** and **5th place in ST PETER THE APOSTLE COLLECTIONS**. We would like to come to the **FIRST PLACE** in all the collections. May I request you to contribute more this year. I appreciate your efforts that you had taken last year to bring the collections to this level.

03. As you all know the பாலர் சபை – இயேசுவின் கண்மணிகள் இயக்கம். is to be established in every parish of our diocese. The Regional Secretary and the National Director are insisting much on this. We have the booklets and the badges for the same in the Procurator's Office. Those who would like to get them please contact the Procurator. Only limited copies are available. If you wish I shall bring the regional secretary or I shall come in Person to speak to you about பாலர் சபை during the monthly recollection at the vicariate level.

04. I will be away from my desk from 01st October to 4th October 2012.

05. A note to the Parish Priests: May I request you to collect the Mission Sunday materials and ordo supplement from your vicariate centres.

Thank you very much for your love, concern and cooperation.

Very Rev. Fr. A. Sahayaraj.
Diocesan Procurator.



சிறப்பாக, மிகச் சிறியோராகிய அவரது சகோதர சகோதரிகளுக்கும் பணி செய்வதே. அவரது சகோதர சகோதரிகள் என்போர் பசியாகவும், தாகமாகவும், அன்னியராகவும், ஆடையின்றியும், நோயிலும், சிறையிலும் வாடுபவர்களே (மத் 25:31-40). அவர்களுக்குப் பணியாற்றுவது என்பது, இரக்கச் செயல்களால் அவர்களுக்கு உதவுவது மட்டுமல்ல, மாண்பும், மனிதமும் இழந்த நிலையில் அவர்களை வைத்திருக்கும் அனைத்து அமைப்புகளையும், ஆதிக்கங்களையும், மாற்ற முயலுவதும் ஆகும்.

எனவே, கிறிஸ்துவ நம்பிக்கை என்பது, இயேசுவை அறிந்து, அன்பு செய்து, அவருடன் இணைந்து இறையாட்சிப் பணியில் (உரோ 14:17) ஈடுபடுவதாகும்.

**4. நம்பிக்கை ஆண்டின் நோக்கம்**

இந்த நம்பிக்கை ஆண்டின் தலையாய நோக்கங்கள் : 1. உயிர்த்த இயேசுவின் பக்கம் நமது மனங்களைத் திருப்புதல். 2. கிறிஸ்துவ நம்பிக்கையின் ஆழத்தையும், அகலத்தையும், நீளத்தையும், உயரத்தையும் கண்டறிதல். 3. கிறிஸ்துவுக்கு திருச்சபை உறுப்பினர்கள் அனைவரும் உண்மையான, மகிழ்ச்சி நிறைந்த சாட்சிகளாய் வாழ்ந்து காட்டுதல். 4. இயேசுவை ஏழைகள், புறக்கணிக்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், கைவிடப்பட்டவர்களில் கண்டு, அவர்களை அன்பு செய்தல்.

**5. வழிகாட்டும் ஒளி விளக்குகள்**

நம்பிக்கை ஆண்டின் நோக்கங்களை நிறைவேற்ற சங்க ஏடுகளும், கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடும் சிறந்த வழிகாட்டிகளாகத் திகழ வேண்டுமென்பது திருச்சபையின், திருத்தந்தையின் விருப்பம். சிறப்பாக, இந்த நம்பிக்கை ஆண்டில், வத்திக்கான் சங்கம் காட்டும் வழி நின்று, கிறிஸ்தவர்கள் அனைவரும் தங்களது சொல்லாலும் செயலாலும் கிறிஸ்துவை உலகுக்குப் பறைசாற்ற வேண்டும் (மாற் 16:15, திருச்சபை பற்றிய மறைக்கொள்கைத் திரட்டு,1).

கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி ஏடு வலியுறுத்தும் 1. நம்பிக்கை அறிக்கை, 2. அருள் அடையாளங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் திருவழிபாடு, 3. அறநெறியில் சிறந்த கிறிஸ்துவ வாழ்க்கை முறை, 4. கிறிஸ்துவ செப வாழ்வு ஆகியவை, இன்றைய மக்களின் புதிய கேள்விகளுக்குப் பதில் சொல்லும் முறையில் கிறிஸ்துவ நம்பிக்கையாளர்களால் செயல்படுத்தப்பட வேண்டும்.

**6. நம்பிக்கை ஆண்டிற்கான திட்டங்கள்**

திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அறிவித்த நம்பிக்கை ஆண்டினைக் கொண்டாட, மறைமாவட்டம், பங்கு அளவிலான பின்வரும் செயல் திட்டங்களை, தமிழக ஆயர் பேரவை பரிந்துரைக்கின்றது.

**1. மறைமாவட்ட அளவில் :**

1.1 நம்பிக்கை ஆண்டு தொடக்க விழா.

1.2 மறைமாவட்ட செயல்திட்டங்களை உருவாக்கும் குழுவை அமைத்தல்.

1.3 மறைமாவட்டத்தில் நம்பிக்கை வாழ்வு பற்றி ஆய்வை மேற்கொள்ளுதல்.

1.4 நம்பிக்கை ஆண்டை மையப்படுத்தி தியானங்கள் நடத்துதல்.

1.5 புதிதாக தொடங்கவிருக்கும், தமிழகத்திருச்சபையின் மாதா தொலைக்காட்சி சிறப்பாகச் செயல்பட, சாந்தோம் கலைத்தொடர்பு நிலையத்திற்கு அருளுதவியும், பொருளுதவியும் செய்ய முன்வருதல்.

1.6 இளைஞர்களுக்கு நம்பிக்கை நடைப் பயணம்.

1.7 துறவியர், கிராமங்களில் நற்செய்தி பணி புரிதல்.

1.8 2 ஆம் வத்திக்கான் சங்க ஏடுகள், கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு பற்றிய பயிற்சிப் பாசறைகளுக்கு ஏற்பாடு செய்தல்.

1.9 பல்சமய உரையாடலுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

**2. பங்கு அளவில்**

2.1 பங்குத்தந்தையரும், துறவியர்களும் இல்லங்களைச் சந்தித்து நம்பிக்கை வாழ்வைப் புதுப்பித்தல்.

2.2 கிறிஸ்துவ நம்பிக்கையில் வளரவும், அதைப் பிறருக்கு அறிவிக்கவும், இறை மக்களுக்கு அன்பியங்களின் வழி பயிற்சி அளித்தல்.

2.3 பொதுநிலையினரின் இயக்கங்களை, பக்த சபைகளைப் புதுப்பித்து உறுதிப்படுத்துதல்.

2.4 இளைஞர்களுக்கு நம்பிக்கை நடைப் பயணம்.

2.5 ஒவ்வொரு மாதமும் சிறுவர்களுக்கும், இளையோருக்கும் சிறப்புத் திருப்பலி.

2.6 ஒவ்வொரு மறைமாவட்டத்திலும், கத்தோலிக்க நம்பிக்கை தோன்றி வளர்ந்த இடங்களுக்கு திருப்பயணம் மேற்கொண்டு, நம்பிக்கையின் வேர்களை உறுதிப்படுத்துதல்.

2.7 கிறிஸ்துவ நம்பிக்கைக்கு எதிரான மூட நம்பிக்கையோடு தொடர்புள்ள செயல்பாடுகளைக் கண்டறிந்து, அவற்றை இறைமக்கள் விட்டொழிக்க ஆவன செய்தல்.

**7. ஒவ்வொருவரும் நற்செய்தியாளராவோம்**

இந்த நம்பிக்கை ஆண்டில் கத்தோலிக்க கிறிஸ்தவ நம்பிக்கை என்னும் விதைக்கு நற்கருணை என்னும் நிலமும், இறைவார்த்தை என்னும் தண்ணீரும், அன்பியம் என்னும் சூரிய ஒளியும், அருங்கொடை செபம் என்னும் காற்றும், வீடு சந்திப்பு என்னும் உரமும் கிடைக்க, இல்லறத்தாரும், துறவறத்தாரும், அருள்தந்தையர்களும் இரவும் பகலும் பாடுபட வேண்டும். இந்த ஆண்டு முழுவதும், **தூய பவுலடியார் கூறுவது போல, எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்வோம் (எபே 6:16). நீர் போகலாம், நீர் நம்பிய வண்ணமே உமக்கு நிகழும் (மத் 8:13) என்ற இயேசுவின் மீது, நமது முழு நம்பிக்கையை வைப்போம். அவரை அறிந்து, அவரை அன்பு செய்வோம். அவரை அன்பு செய்யும் போது, அவரை அனுபவிப்போம். அவரை அனுபவிக்கும் போது, அவரைப் பற்றிய நற்செய்தியை, உலகெங்கும் எடுத்துரைப்போம்.**



**8. முன்மாதிரி**

நம்பிக்கை வாழ்வுக்கும், ஆண்டவர் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை எடுத்துரைக்கும் பணிக்கும் சமாரியப் பெண், புனித மகதலா மரியா, புனித பவுலடியார், புனித தோமையார், புனித பிரான்சிஸ் சவேரியார், புனித அருளானந்தர், புனித அல்போன்சா, அருளாளர் அன்னை தெரசா, அருளாளர் தேவசகாயம், வீரமாமுனிவர், இராபர்ட் தெ நொபிலி, நமது தமிழகத்தில் வாழும் சிறந்த நற்செய்தியாளர்கள் அனைவரும் நமக்கு முன்மாதிரியாக திகழ்வார்களாக.

நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் அன்னை மரியா, இவ்வாண்டில், நாம் நம்பிக்கை வாழ்வில் மறுமலர்ச்சி காணவும், நாம் தலைசிறந்த நற்செய்தியாளர்களாகத் திகழவும், நமக்காக இறைவனிடம் பரிந்து பேசுவாராக.

**கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாகிய நாம், நம் நம்பிக்கையின் நாயகராம் இயேசுவை, இன்னும் அதிகமாய் அறிந்து, அனுபவித்து, அவரை அனைவருக்கும் அறிவிப்போம் என்ற உறுதியுடன் இந்த நம்பிக்கை ஆண்டை தொடங்குவோம். இம்முயற்சியில் நீங்கள் வெற்றி பெற்று சிறந்த நம்பிக்கையாளர்களாய் வாழ, உங்களை அன்புடன் வாழ்த்துகின்றோம்.**

**என்றும் அன்புடன்,**
**தலைவர், தமிழக ஆயர் பேரவை**

# FROM THE DESK OF THE VICAR GENERAL

## Annual Clergy Retreat – 2012

**Dear Fathers,**

The annual clergy retreat of our diocese is arranged in a single batch from November 04 Sunday evening to 09 Friday, 2012 at the Shrine Basilica of Our Lady of Poondi. Please note the dates and make yourself available on all the days totally disposed for our spiritual renewal.

**Preacher : Most Rev. Vincent Concessao**
**Archbishop of Delhi.**

Yours in Christ,
Rev. Msgr. C. Peter Francis,
Vicar General.